# என் கடன்



வே.ஜ.வரதராஜன்

ஜீவநதி வெளியீடு

# என்கடன்

வே.ஐ.வரதராஜன்

ஜீவநதி வெளியீடு
கலை அகம்
அல்வாய்

முதற்பதிப்பு : 2012 மார்ச்

என்கடன்
(கவிதைத் தொகுதி)

©வே.ஐ.வரதராஜன்

அட்டை வடிவமைப்பு : வ.வித்தியாபரன்

வெளியீடு : ஜீவநதி
கலைஅகம்
அல்வாய்

பக்கங்கள் : xi + 64

விலை : 200/=

அச்சுக்கோர்ப்பு : மதி கலர்ஸ்
நல்லூர்

ISBN : 978-955-0958-00-9

ஜீவநதி வெளியீடு : 17

பெரியப்பா, பெரியம்மா
ஐயா, அம்மா
ஆகியோருக்கு

# நோக்கு

*தூய கரங்களும் துணைசேர் விதிகளும்*
*ஆய பணிக்கு உறுதுணையாம் - நேயமுடன்*
*மக்களின் சேவை மாண்பு தரும் ஞான்றும்*
*அக்கறை கொள்வீர் அறிந்து.*

*பேணுகின்ற நட்பும் பீடுநிறைப் பண்பும்*
*காணு முயர் சேவைக் கணி கலனாம் - வானுயர்ந்த*
*கல்விக் கண்கொண்டு கருமமே செய்யின்*
*நல்லிதயம் வாழ்த்தும் நயந்து.*

**வே.ஐ.வரதராஜன்**

## உள்ளடக்கம்


பதிப்புரை

முன்னுரை

என்னுரை

1. என் கடன்
2. படுநிலம்
3. சைக்கிள் சவாரி
4. பயணம்
5. முற்றத்து முருங்கைமரம்
6. வேனிற்காய்கள்
7. வெளிச்சம்
8. மேக மூட்டம்
9. வெற்றுப் பக்கங்கள்
10. புதிய முகமூடிகள்
11. பூட்டிய கதவுகள்
12. விஷமரங்கள்
13. தொலைந்த கிராமங்கள்
14. காற்று
15. ஓய்வின் அசைபோடல்களில்
16. பல்லி
17. மாயமான்
18. குரூரத்தின் சாட்சிகள்

19. பிச்சைப் பெட்டிகள்

20. வேலியும் பயிரும்

21. நான்

22. வரட்சி

23. மறந்து போன நாட்கள்

24. வெறுமையே நிஜமாகி

25. பூஜ்ஜியம்

26. நிழல்

27. அப்பாவின் கார்

28. முதுமை

29. மகிழ்ந்த காலங்கள்

30. கேள்விக்கு எல்லை ஏது?

31. யதார்த்தமும் மாயதார்த்தமும்

32. மனிதனுக்கு என்ன விலை?

33. ஒரு முகமாய் வாழ்தல் கூடும்

34. சேவல்

35. புதிய வீடு



# பதிப்புரை

'ஜீவநதி'யின் பதிப்புப் பணியில் 17ஆவது வெளியீடாக வே.ஐ.வரதராஜனின் "என் கடன்" என்ற கவிதைத் தொகுப்பு நூல் வெளிவருகின்றது. ஈழத்து இலக்கியகாரர்களுக்கு வரதராஜன் அவர்களை நன்கு தெரியும். ஏனெனில், அவர் தமது பாடசாலைக் காலம் முதல் இன்றுவரை ஆழ்ந்த வாசிப்புச் செய்பவர். நல்ல இலக்கியங்களைத்தேடிப் பெற்று, அவற்றைத் தாம் நயப்போடு மட்டுமன்றி, பிறரும் அவற்றைப் படிக்க வேண்டும் என்ற விருப்புடன் நண்பர்களிடையேயும் ஏனைய இலக்கியகாரரிடையேயும், அந்த இலக்கியங்களின் சிறப்புகளை எடுத்துச் சொல்லி வருபவர். தமிழ்ப் படைப்புகளில் மாத்திரமன்றி, தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பிறமொழி இலக்கியங்களிலும் பரிச்சயமுள்ள வரதராஜன் அவர்களிடம் எப்போதும் ஒரு கவிதா உள்ளம் இருந்து வந்துள்ளது என்பதனை இந்நூலிலுள்ள கவிதைகள் எடுத்துக் காட்டுகின்றன. கவிஅரங்குகள் கோலோச்சிய ஒரு காலத்தில் ஈழத்தின் பிரபல கவிஞர்களுள் ஒருவராக விளங்கிய அரியாலையூர் கவிஞர் வே.ஐயாத்துரை அவர்களின் மகனான வரதராஜன் அவர்கள், தமது முதலாவது நூலாக கவிதைத்தொகுப்பு நூல் ஒன்றை வெளிக் கொணர்வது 'ஜீவநதி' குடும்பத்துக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அவர் 'ஜீவநதி' குடும்பத்தின் வளர்ச்சியில் அக்கறையுள்ள ஒரு குடும்ப உறுப்பினரும் கூட. அவர் மேலும் பல நூல்களை இலக்கிய உலகுக்குத் தரவேண்டும் என 'ஜீவநதி' வாழ்த்துகிறது.

**கலைஅகம்** — **க.பரணீதரன்**
**அல்வாய்** — **ஆசிரியர் ஜீவநதி**

## சன்னமான ஒரு மென் மொழியில் தனது நியாயக் குரலை எழுப்பும் வே.ஐ.வரதராஜனின் கவிதைகள் பற்றி...

கலையாக உருவம் பெறுகையில் மொழியானது தனக்கான ஒரு நுண்மையான இயல்பினை வரித்துக் கொள்கிறது. அந்த இயல்பின் அடையாளங் காட்டலினூடாக அக்கலை வடிவம் தனக்கான இடமொன்றினைத் தேடிக் கொள்கிறது.

பொருளியல் அல்லது வரலாறு சார்ந்த ஒரு தகவலை மொழி வடிவிற் தருவதற்கும் வாழ்வு சார்ந்த, மனிதன் சார்ந்த அனுபவமொன்றை மொழி வடிவிற் தருவதற்கும் அடிப்படை யிலான வேறுபாடு, மேற்சொன்ன நுண்மையான கலையழ கினாலேயே உணரப்படுகிறது.

பொதுவாகவே இந்த வாழ்வை, இந்த மனிதர்களை, இந்த வாழ்விலும் மனிதர்களிலும் அமைந்து கிடக்கிற தனித் தன்மைகளை, ரசனையோடும் ஈடுபாட்டோடும் கூர்ந்து பார்க்கிற ஒருவரால் பல தனித்துவங்களைத் தரிசிக்க முடியும். மனித நேயத்துடனான அத்தகைய பார்வையினூடாகக் கிடைக்கும் தரிசனங்கள், படைப்புகளைத் தரவல்ல ஒரு பக்குவத்தையும் தருமாறான உந்துதலையும் வழங்குகின்றன.

அத்தகைய ஒரு நிலைக்குட்பட்டவராகவே வே.ஐ.வரத ராஜன் தனது கவிதைகளை எம்மிடம் கொண்டு வருகிறார்.

வாழ்வின் மீதான, இந்த மனிதர்களின் மீதான அவரது ரசனை, விமர்சனம், வியப்பு, கண்டனம், கவலை யாவும் அவருக்கே யுரித்தான ஒரு மென்மையான, ஆயினும் கூர்மையான மொழியில் அவரது கவிதைகளில் பதிவாகியிருக்கின்றன.



முப்பத்தேழு வருடங்களாக அரச பணியில் ஈடுபட்டிருந்த வரதராஜன், தனது பணி ஓய்வு கிடைக்கப் பெற்ற பிறகு, தன் முதலாவது கவிதைத் தொகுப்பைத் தந்துள்ளார்.

ஒரு உண்மையான அரச பணியாளன் மனச் சாட்சியுடனும் மனித நேயத்துடனும் இருக்க விரும்பியதன் விளைவான எதிரொலிகளாகவும் பணிக்கால அனுபவங்களின் நுண்வலி வெளிப்பாடுகளாகவும் மனித நேயப்பதிவுகளாகவும் விளங்குகின்ற "என்கடன்..." "ஓய்வின் அசைபோடல்களில்..." போன்ற கவிதைகள் என்னை மிகவும் தொட்ட கவிதைகளாக அமைந்துள்ளன.

கோப்புகளோடும் மேசைகளோடும் அலுத்துச் சுழலும் மின்விசிறிகளோடும் சோம்பி ஒழுகும் மின்னொளியோடும் நிகழ்ந்தேறுகின்ற காரியாலயப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஒரு மனிதனை "என்கடன்" எம் முன் கொண்டு வருகிறது.

"........ கோவைகள்  
ஒவ்வொன்றாய்ச் சரிதம் சொல்லும்  
கோரிக்கைகளாய் வேண்டுதலாய்  
விடய ஏடுகள் புரளும்  
கோவைகளின் உயிர் மூச்சில்  
உழன்று சோம்பிய முகங்கள்..."

காரியாலயமொன்றினைக் கண்முன் கொண்டுவரும் சித்திரமாய் விளக்குகிறது என்கடன்.

"அனுபவங்களின் அசைபோடல்களில்  
ஆனந்தமும் சோகங்களும்  
கற்ற கணிதமும், விஞ்ஞானமும்  
அந்நியமாய்த் தோன்றும்.  
பேரேடுகளும் காசோலைகளும்  
பிறிதொரு பாடமாய்மாறும்"

"அதிகாரியின் பணிப்புகளில்
இறுக்கங்கள் சூழ்ந்திருக்கும்
பெற்ற பட்டங்கள்
நூலிழையிற் தொங்கும்
தன்வயமிழந்து வெற்று மனிதனாய்..."

என அவரது "ஓய்வின் அசைபோடல்களில்..." யதார்த்த மான பணியிட அனுபவங்களையும் ஈரமற்ற சூழலையும் எமக்கு உணர்த்துகிறது.

முற்றத்து முருங்கைமரம், படுநிலம், வெளிச்சம், முதுமை, பயணம், வேனிற்காய்கள், பிச்சைப் பெட்டிகள், தொலைந்த கிராமங்கள் ஆகிய கவிதைகளில் கவிஞரின் சமூக அக்கறை வெளிப்படுகிறது. குறிப்பாக "முற்றத்து முருங்கை மரம்" – இழந்து போன ஒரு வாழ்வின் வசந்தக் கோலங்களை நினைவுக்கு கொண்டு வருவதோடு யதார்த்தத்தின் கவலைக்குரிய நிலைமை யையும் சுட்டிக் காட்டுகிறது. படுநிலம் என்ற கவிதை எமது மண்ணில் இன்றும் நிலவி வருகின்ற முதிர்கன்னிகளின் சோகம் பற்றிய ஒரு பதிவாகி

"பக்கத்து இருக்கையின்
பாரவயிற்றுப் பெண்ணின்
பரவசம் பார்க்கும் போது
என்னுடல் ஈரமாகி
மனம் எழுச்சியுற்றடங்கும்"

என்ற துயர வரிகளால் எம் நெஞ்சைக் கீறுகிறது. வரதராஜனின் பார்வையும் நோக்குக் கூர்மையும் அவருக்கான மென்மையான கவிதை மொழியூடு இத் தொகுப்பினூடாக கவிதை ரசிகர்களின் கையில் கிடைக்கிறது. இவரது கவிதைகள் எந்த ஒரு பத்திரிகை, சஞ்சிகையில் வெளிவந்திருந்தாலும், இவருடையது



என்றறிகிற மாத்திரத்தில் படித்துப் பார்த்து விட வேண்டுமென்று தூண்டுகிற மாதிரி, ஒரு அடையாளத்தை வரதராஜன் தனது கவிதைகளில் ஆங்காங்கே ஏற்படுத்தி வைத்திருக்கிறார். இந்தப் பண்புக்கு அவரது ரசனையும் மொழித் தேர்ச்சியும் மட்டும் காரணங்களாகிவிடாது.

முதலில் அவர் ஒரு தேர்ந்த இனிய தமிழ்க் கவிதைகளைப் படைத்த, தனித்த கவிஞர் அரியாலையூர் வே.ஐயாத்துரை அவர் களின் மகனாகப் பிறந்து, அவரால் வழி நடத்தப்பட்டமை அவருக்குள் இருக்கிற கவித்துவத்துக்கு ஆதாரமாக இருப்பதைச் சொல்ல வேண்டும்.

அடுத்ததாக அவரிடம் அமைந்து காணப்படுகிற மொழி ஈடுபாட்டையும் தேர்ந்த வாசகனாய் முதிர்ச்சி பெற்று விளங்கு கின்ற தன்மையும் சொல்ல வேண்டும்.

ஒரு நல்ல படைப்பில் ஆழ்ந்து, நெகிழ்ந்து, குழைந்து போகிற ரசனை முதிர்ச்சியுடைய ஒருவர் எழுத நேரிடும் போது அவருடைய எழுத்துக்கென சில தனித்துவங்கள் அமைந்து போவதை யும் தவிர்க்க இயலாது. கவனிப்புக்குரிய ஒரு கவிஞராய் ஆகிவிட்ட காரணத்தால், இன்னுமின்னும் நுண்ணிய முறையில் தனது அவதானிப்புகளை முன்வைக்கும் கடமையும், வெகு அரிதாய் இவரது சில கவிதைகளில் ஏற்பட்டுப் போன ஓசை நயத்தில் கவனம் போவதால், நவீன சொன் முறையில் ஏற்படுகின்ற ஒரு தளர்ச்சியைக் கவனமாகத் தவிர்த்து கொள்ளும் தேவையும் உண்டாகின்றன. எதிர்காலம் இவர் மூலமாக இன்னுமின்னும் சிறந்த படைப்புகளை நிச்சயமாகத் தரும் என நம்பலாம்.

**41,இராஜவீதி** — **அன்புடன்**
**நல்லூர்** — **ந.சத்தியபாலன்**

# என்னுள்ளிருந்து...

"என்கடன்", எனது முதற் கவிதைத் தொகுப்பாகும். இதனை உங்களது கரங்களில் தருவதில் மகிழ்ச்சியடைகிறேன். எனது கவிதைகளைத் தொகுப்பாக வெளியிடும் எண்ணம் எனக்கு ஆரம்பத்தில் இருக்கவில்லை. நண்பர்களது தூண்டுதலும் உதவியுமே தொகுதி உருப்பெறப் பெரிதும் உதவியுள்ளன.

1972ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் எனது கவிதைகள் உள்ளூர்ப் பத்திரிகைகளில் பிரசுரமாயின. அவ்வப்போது ஏற்பட்ட உணர்வுத் தூண்டுதலினால் எழுதப்பட்ட கவிதைகள் அவை. பொதுவாக அக்கவிதைகள் மரபு சார்ந்தவை. திருவிழா, பண்டிகைக் காலங்களுக்கு ஏற்ற விதமாக அக்கவிதைகள் புனையப்பட்டன. பத்திரிகைகளில் பிரசுரமானால் போதும் என்ற மனநிலைதான் அப்போது எனக்கு இருந்தது.

புனைவிலக்கியங்களைப் படிப்பதே எனது தவமாகிவிட்ட நிலையில் – வாசிப்பும், ரசனையுமே என்னளவில் முதன்மை பெற்றிருந்தன. அக்காலத்தில் தீவிர படைப்புத் தூண்டலோ, எழுத வேண்டுமென்ற ஆர்வ உந்துதலோ என்னளவில் ஏற்படவில்லை.

அத்துடன் சலிப்பூட்டும் எனது உத்தியோக வாழ்க்கை, கெடுபிடி மிகுந்த அலுவலக நடைமுறைகள் வேலைச்சுமை என்பன எனது எழுத்து முயற்சியை சாத்தியமில்லாமலாக்கின என்றும் கூறலாம்.

முப்பத்தி ஏழு வருட அரச சேவை அனுபவம், மனங்கூச வைக்கும் சிறுமைகளும் ஏமாற்றங்களும் மிக்க வாழ்வு தந்த



தரிசனம், வாசிப்பின் பேறாய் லபித்த பின்புல வீச்சு என்பன என்னை "எழுது எழுது" எனத் தூண்டின. மரபு வழிக் கவிஞனாகவே கவனம் பெற்ற நான், ஓரளவு துல்லியமான, இயல்பு தப்பாத் தமிழில் எழுத ஆரம்பித்தேன். அவ்வகையில் உருவாகிய கவிதைகள் தான் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

எனது தந்தையார் கவிஞர்.வே.ஐயாத்துரை அவர்கள் மரபுக்கவிதைகள் எழுதியே புகழடைந்தார். ஏலவே கூறியது போல, நானும் மரபுக் கவிதைகள் எழுதியுள்ளேன். இருந்தபோதிலும், படைப்புச் சூழலின் புரிதல் என்னை அவரில் இருந்து ஓரளவு வித்தியாசப்படுத்தியுள்ளது.

இன்றைய சூழலில் – படைப்பு வெளியில், பல கவிஞர் களது கவிதைகள் – புதிய பரிணாமங்களுடன், பிரமிக்கத்தக்க வகையில், நுண்ணிய சொற்பிரயோகங்களுடன் வீச்சுத் திறன் மிக்கனவாய் உணர்வு நிலை உச்சங்களைத் தொட்டனவாய் வெளி வருகின்றன.

அத்தகைய கவிதைகளின் பரிச்சயம் என்னைப் பெரிய அளவில் மாற்றி உள்ளது. அதனை இத் தொகுப்பில் உள்ள கவிதைகள் இனங்காட்டும் என நான் முழுமையாக நம்புகிறேன்.

இச்சந்தர்ப்பத்தில் எனது நினைவில் பலர் வருகிறார்கள். அவர்கள் அனைவருமே எனது படைப்பூக்கத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்கள் என்பதனை என்னால் துணிவுடன் கூறமுடியும்.

நான் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி கற்றவன். எனது மொழி வளம் சிறக்க உதவியவர்களான எனது கல்லூரித் தமிழாசிரியர்களையும் ஆங்கில ஆசிரியர்களையும் கூறுவேன். குறிப்பாகக் கல்லூரியின் இடைநிலைப்பிரிவின் கல்விப்பகுதி தலைவராக அப்பொழுது இருந்த வண.பிதா. கலாநிதி தாவீது அடிகளார் அவர்களை என்னால் மறக்க முடியாது. கசடறத் தமிழைக் கற்பதற்கு உதவிய பேராசான் அடிகளார் தான்.

தமிழ்மொழியின் சீரிளமைத் தோற்றத்தையும் அழகையும் அதன் கவித்துவ வீச்சையும் என்னுள் பதியம் போட்டவர்கள் எனது ஆசிரியர்கள் தான்.

என்னை ஒரு படைப்பாளியாக முகவரி தந்து அடையாளப் படுத்தியது "கலை முகம்". இச் சஞ்சிகை எனது வாசிப்பு ரசனையை முன்னிலைப்படுத்தி ஒரு பேட்டியை ஜனவரி – யூன் 2007 ஆம் ஆண்டு இதழில் வெளியிட்டது. என்னைப் பேட்டி கண்டவர், தேர்ந்த இளம் எழுத்தாளரான இராகவன் அவர்கள். எனது நேர்காணலை மட்டுமல்ல, எனது சில கவிதைகளையும் சஞ்சிகை பிரசுரம் செய்து என்னை கௌரவப்படுத்தியுள்ளது. அந்த வகையில் சஞ்சிகையின் பொறுப்பாசிரியர். கி.செல்மர் எமில் அவர்களை மறக்க முடியாது. கலைமுகம் மட்டுமல்ல, என் கவிதைகளைக் காலம் தோறும் பிரசுரித்த சஞ்சிகைகளான ஜீவநதி, மல்லிகை, ஞானம் நாளிதழ்களான உதயன், வலம்புரி, வீரகேசரி வார இதழ்களான சற்றடேமெயில், சுடரொளி ஆகியவற்றையும் இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூர்தல் எனது கடமையாகும்.

வாசிப்பு, ரசனை என்று நின்று விடாமல் புனைவுத் தடத்தில் பிரவேசிப்பதற்கு, எனக்கு ஊக்க சக்தியாக இருந்தவர்கள். க.சட்ட நாதன், மு.அநாதரட்சகன், கலாநிதி.த.கலாமணி, இராஜேஸ் கண்ணன், சு.குணேஸ்வரன்(துவாரகன்), திருமதி.ஜெயஸ்ரீ சிவ குமாரன், சி.மகாலிங்கம், திருமதி.விஜயா குமரதாசன் ஆகியோராவர். அவர்களுக்கு எனது நன்றிகள்.

எனது இத்தொகுதிக்கு முன்னுரை வழங்கி உதவிய மதிப்புமிக்க நண்பரும் கவிஞருமான ந.சத்தியபாலன்.

தொகுதி வெளிவரக் காரணமானவர்களான ஜீவநதி சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க.பரணீதரன், துணையாசிரியர் வெ.துஷ்யந்தன்.

நூலுக்கு அட்டைப்படத்தை வடிவமைத்த எனது மகன் வ. வித்தியாபரன்.



நூலை அழகுற அச்சேற்றி உதவிய மதி கலர்ஸ் நிறுவனத்தினர்.

இவர்கள் அனைவரது துறைசார் ஒத்துழைப்பின்றி இத் தொகுதி இத்தகைய அழகிய வடிவம் பெற்றிருக்க முடியாது.

இவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**59, கலைமகள் வீதி,** **வே.ஐ.வரதராஜன்**
**அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**

# என்கடன்

தன்னுயிர் பெற்றெழும் மேசைகள்
முனகும் காற்றாடியின் கீழே,
இரும்பு நெஞ்சங்களாக இறாக்கைகள்.
நலிந்த உள்ளங்களோடு பணி செய்வோர்
இயல்பினை உணர்த்தும் மின்குமிழ்கள்.
இருக்கைகளின் இறுக்கத்தில் எப்போதும்
எட்டுமணி நேர அவஸ்தை.

தம் இருப்பினை உணர்த்தும் கோவைகள்
ஒவ்வொன்றாய்ச் சரிதம் சொல்லும் –
கோரிக்கைகளாய், வேண்டுதலாய்
விடய ஏடுகள் புரளும்.

கோவைகளின் உயிர் மூச்சில்
உழன்று சோம்பிய முகங்கள்
சேவை ஏற்றமும், விலக்கமும்
கைவழிக் கடிதமாய் உயிர்ப்புறும்.
வேதன ஏற்றமும், சீரமைப்பும்
விதிகளுக்கமைவாய் மாறும்

குறிப்புக்கள் வழியே கோவைகள் மீளும் –
தினமொன்று அதற்காய் தேயும்.
தேய்ந்த இருக்கைகள்
இன்னொருவருக்காய்ச் சேவை செய்ய
இனியும் காத்திருக்கும்.



# படுநிலம்

அந்த, நீண்ட அலுவலகத்தின்
யன்னல்கள் காற்றிலாடிப்
படபடக்கின்றன,
என் நெஞ்சத் துடிப்புப் போல

தினமும் என் தரிசனத்தில்
விதவிதமாய்க் காட்சிகள்,
சோபனங்கள், சுகந்தமாய்
யன்னலூடே மிதந்து வரும்.

காட்சியின் விரி பரப்பில்
பட்டமரமும் பசுமை குன்றா
மரமும் பேசி நிற்கும்.
இந்திரிய மிழந்த மனிதனாய்
இயலாமை கூடி நிற்கும்
பட்டமரம் சோக வடிவாய்...

பூத்துக்குலுங்கும் பசுமை மரம்
தன் குறி திறந்து இயைபுடன்
சந்ததி விருத்தி வேண்டிக்
காத்து நிற்கும்.

என் நிலையும் இதே போல்
படு நிலத்துக் கிணறாய்
ஊற்றுக் கண் திறக்காது,
உணர்வழிந்து போகின்றது.

பக்கத்து இருக்கையின்
பார வயிற்றுப் பெண்ணின்
பரவசம் பார்க்கும் போது
என்னுடல் ஈரமாகி, மனம்
எழுச்சியுற்று அடங்கும்.



# சைக்கிள் சவாரி

வீதியோரம் எங்கும்
விழிகள் அலைபாயும்
சைக்கிள் கடைதேடி.

காற்றிறங்கிய சைக்கிளில்,
ஓடவியலாத உபாதையுடன்
நீண்ட நாட்களாக ஓட்டம்.

உருக்குலைந்த வீதிகள்
உயிரினைப் பணயமாக்கும்.
காற்றின் அலைப்பில்
எற்றுண்ட பொலித்தீன்கள்
முகத்தினிலே முத்தமிடும்.
அணிவகுப்பு வாகனங்கள்
அதிர்வினை ஏற்படுத்தும்.

காற்றுநிரப்ப வலுவில்லா
உடல்நிலையில் தேக்கம்.

தேவைகள் தெரிவாகி
மட்டுப் பட்டனவாய்
வங்கி, மருத்துவ மனை,
நண்பர்கள் சந்திப்பு
என்பன எல்லையாய் –

அலைபாய்ந்த கண்களில்
தரிசனமாகும் சைக்கிள் கடை.
காற்று நிரப்புவதற்காய்
உருட்டிச் செல்லுகையில்
ஒட்டியுலர்ந்த தோற்றமுடன்
காற்றடிக்கும் முதியவர்;

வறுமையின் கோடுகள்
முகத்தினிற் தெரியும்
பிழைப்புடன் ஒன்றும்
பலமற்ற கரங்கள்,
கரங்களில் நடுங்கும்
காற்றமுத்தும் பம்பி.



காட்சியின் தாக்கத்தால்
காற்றடிக்க முடியாமல்
மீளவும் அதே நிலையில்
சவாரி தொடர்கிறது.

# பயணம்

சுமைகளைச் சுமக்க முடியாதவாறு,
சுமந்திடும் பயணிகளின் பயணம்,
நீள்கின்றது.

கிட்டாத சுகத்திற்காய் ஏங்கும்
முதிர் பெண்ணென சிற்றூர்தி
மூச்சிறைக்கும்.
மதிய வெயிலோ மோகத் தீயாய்ச்
சுட்டெரிக்கும்
செயற்கைச் சுகந்தங்களோடு
வியர்வையின் கசகசப்பு.
முன்னேவர முண்டியடிக்கும்
பிரயாணிகளின் அவலங்கள்.

ஒழுங்கு முறை மீறிப் பின்தள்ளி
முதன்மை பெறும் அரச ஊழியனாய்
மற்றவரை நசித்து, மிதித்து
அரங்கேறும் நாடகங்கள்.



ரகசியமாய்ப் பெண்ணுடல் தீண்டும்
இன்பமாய் காற்று மெலியதாய்
ஊர்ந்து நகரும்.
இருப்பிடங்களை நோக்கிச் செல்லும்
இப் பயணங்கள் எப்போதும்
தவிப்புடன் தான்.

தரிப்பிடம் நீக்கி இறக்கிவிடும்,
அவலத்துடன் வாழ்வியலும்
என்றும் நியதிகளை மீறியபடி...

# முற்றத்து முருங்கைமரம்

முற்றத்து முருங்கை மரம்
பூத்துக்கிடக்கின்றது.
அணில் கோதிய பூக்கள்
இறைத்துக் கிடக்க,
பசுந்தளிர்கள் தலையாட்டும்.

தழைத்த கிளைகளில்
தடித்தடியாய் காய்கள்;
விதவிதமாய் ருசியூட்டும்
வறுவலாய், சுண்டலாய், குழம்பாய்,
தாது விருத்திக்கும் சோகைக்கும்
மருத்துவனாய் உயர்வு பெறும்.
அயலவர்க்கு உதவியாகும்.

முன்னரும் இப்படித்தான்
பூரணமாய் பொலிந்து நின்ற



மரமும் முறிந்து வீழ்ந்ததுவும்,
நகர் நீங்கிப் புகலிடம் தேடிப்
புறப்பட்டுச் சென்றதுவும்,
வரலாறாய் நினைவையூட்டும்.
இன்றும் பயம் தோற்றம் கொள்ளும்.

இரண்டு வருடங்கள் சென்றதும்
மீளவும் குடியேற்றம் -
எதிர்பார்ப்புகள் எண்ணிலடங்கா;
முற்றத்து முருங்கை மீண்டும்
விருட்சமாய் காட்சி பெற,
எங்கிருந்தோ பற்றி வந்த
மயிர்க் கொட்டிகளின் தொல்லை
அடிமரத்தில் கரும் பட்டாய்.

கனல் மூட்டிய தூளினோடு
மனைவியின் யுத்த பிரசன்னம்.

மறு பொழுதில் அவை
மறுபடியும் மரத்தில் தோன்றும்.

முருங்கை மரத்தின் கனவுகளில்
மனம் அல்லாடுகிறது.
நித்தமும் பார்க்கையிலே
நீண்ட பயணத்தின் நினைவு
கிலேசத்தை உருவாக்கும்.



## வேனிற் காய்கள்

வெப்பக் காற்றில்
மிதந்து வரும்
மகரந்த மணிகள்
பிஞ்சுப் பூக்களில்
சேர்கின்றன.

காம்பு முதிரா மலர்கள்
கருக்களைச் சுமக்கவியலா
சுமையுடன் தவிக்கின்றன.

வேனிற் காய்கள்
வெம்பிப் பழுத்ததுடன்
செடிகளும்
கருகித் தீயாகின்றன.

# வெளிச்சம்

வெளிச்சத்தினை
இரவல் கொடுத்த
தெரு விளக்குகள்
கண்மூடித் தூங்கும்.

சோரமாய்த் தத்தெடுத்த
மின்சாரம்
வீடுகளை அலங்கரிக்கும்.
இரவல் வெளிச்சத்தில்
உச்சப் பயன்பாடு
தடையின்றித் தொடரும்.

தெருவோர இருட்டில்
தேவை பல பூர்த்தியாகும்.
இருட்டினில் தடம் புரண்டு,
வெறியோடு ஒருவன்
வீதியில் குரல் கொடுப்பான்.
குரல் கேட்ட தெருநாய்கள்
ஊளையிட்டு ஊர் எழுப்பும்.

சில வீட்டின் வெளிச்சம்
கல்விக்காய் சேவையாற்றும்.
மின்சார விளம்பரங்கள்
தெருச் சந்திகளில்
கேலி செய்து கண் சிமிட்டும்.

# மேக மூட்டம்

கரிய இருட் போர்வையால்
இறுக மூடிய படி
வானில் நிலவு
எங்கோ ஒளிந்துவிட்டது
இன்று வரும்
நாளை வருமென
குழந்தையிடம் சொல்லி
உணவு ஊட்டி
உறங்க வைத்தாயிற்று;
நிதமும் இதே விதமாய்
ஒவ்வொரு சாட்டுதல்கள்
மேகமூட்டங்கள்
எப்போ விலகுமென
காத்திருப்புடன்
அழும் குழந்தைக்கு
நிலாக் காட்டுதற்காய்
எதிர்பார்ப்புகளுடன்
காலம் கழிகிறது.



# வெற்றுப் பக்கங்கள்

உனக்கும் எனக்குமான
இடைவெளிகள்,
நீண்டு கொண்டேயிருக்கின்றன.
முன் முடிவுகளுடனான, உன்
அணுகுதல்கள் என்னை
எரிச்சலடையச் செய்கின்றன.

பிரதி தினமும் உன் எத்தனங்கள்
வீணாகிப் போகும் போது
ஏற்படும் ஏமாற்றங்கள்
அக்கினியாய் உருவகிக்கும்.

உன் எழுதுகருவியின் தன்மை
வீரியமற்றுப் போவதனால்
உருவாக்கமில்லாமல்
வெற்றுப் பக்கங்களே
இறுதியில் மிஞ்சும்.

உன் எண்ணக் கருக்கள்
வாழ்வின் நீட்சியில்
பதிவழிந்த சுவடுகளாய்
வெறிதாகிப் போகும்.



# புதிய முகமூடிகள்

மழைக்கால நேரங்களில்
சுவர்கள் கழுவப்படுகின்றன.
ஏற்கனவே பூசிய வர்ணங்கள்
கரைந்து போவதும் விடியலில்
புதிய வர்ணங்கள், பூசுதலும்
நித்திய மாகின்றது.

கொடிய வார்த்தைகளும்
குரோதங்களும் அழிந்ததாய்
புத்துணர்வு ஏற்படுகையில்-
மறுகாலை, முன்னரைவிட
அழிக்கமுடியா வசவுகளுடன்
புதிய சுவரொட்டிகள் சிரிக்கும்.

ஒவ்வொரு விடியல்களிலும்
புதியதாய் முகமூடி யணிந்து
மக்கள் இயல்பினைத் தொலைத்தபடி
வாழ்தல் சாத்தியமாகின்றது.

# பூட்டிய கதவுகள்

எப்போதும் தேவைப்படுவது
இல்லாத ஒன்றுதான்.
மறைந்து போனவற்றை
மனம் மீள் பதிவு செய்யும்.

வேண்டுதல்கள் யாவும்,
மனக் கதவினுள்ளே
இறுகப் பூட்டியிருக்கும்.

திறவு கோல் இல்லாமல்
தத்தளிக்கும் வேளையிலே,
தேவாரம் பாடுவதற்கு
நாயன்மார் வருகைக்கு,
இனியும் காத்திருக்கும்.



# விஷமரங்கள்

மூடுண்ட வட்டத்தினுள்
முனகல்கள் கேட்கின்றன.
காதலா, காமமா, வன்மமா
எனத் தெரியாமல்
வெளிவரத்துடிக்கும்.
ஆளுமையின் குரல்கள்
நசுங்கும் கோரம்.

கனத்த தலைகளில்
வெள்ளை மயிர்களாய்
புழுக்களின் தோற்றம்.
"ஜெயமோகனின்" படைப்பு
"டார்த்தீனியம்" போல
ஊர் நடுவே விஷமரமாய்
தம் கிளை பரப்பும்
வேரோடிச் சமூகத்தின்,
இருப்பினைத் தகர்க்கும்.

பாதிக்கும் மனங்கள்
அக்கினியாய் மூண்டெழும்
முனிவனின் சாபம் போல
அநீதியைச் சுட்டெரிக்கும்.



# தொலைந்த கிராமங்கள்

கிராமங்கள் முகவரியை
தொலைத்து நிற்கின்றன.
உறவுகளும் சொந்தங்களும்
அங்கொன்றாய் இங்கொன்றாய்
அலமந்து தவிக்கின்றன.

தோட்டங்கள் துரவுகள்
வாழ்விழந்த விதவைகளென,
தேடுவாராற்று போகின்றன.
ஊர் நாய்கள் உறவிற்காய்
அலைந்தோடித் திரியும்.
கிராமத்து வாசங்கள் ஊருணியின் புதைகுழியில்
நாற்ற மெடுத்துக் கிடக்கும்.

வாழையிலை விருந்தும்
வாசல்வழிக் கோலமும்
வகையிழந்து காணும்.
சாயங்கால மணியொலிக்க

ஊரோசை அடங்கும்.
கிராமத்து பாடல்களும் நடுநிசிக் கூத்துக்களும்
நலிந்தழிந்து போகும்.

முகவரியின் தேடலுக்காய்
நெட்டுயுர்த்து, கிராமங்கள்
மீளவும் காத்திருக்கும்.



# காற்று

காற்று வலிமையானதுதான்
கூற்றுவனென கொடியதாகவும்,
குளிர்ந்த நற் தென்றலாகவும்
வீசுகிறது.

வான் மறைக்கும் இராட்சதனாய்
கிளை பரப்பும், மரங்களினை
வேரறுத்து வீழ்த்தியதற்காய்
வீரம் காட்டும்.

ஆடை நெகிழ்த்தி அலங்கோலம்
செய்ததற்காய் கைகொட்டும்
அணங்கவர் நிலைகண்டு
நாணிச் சிரிக்கும்.

கான மிசை மூங்கிலினுள்
ஓசைதரும், மூச்சினதாய்

உருவங்கொள்ளும்.
தேர்ந்ததொரு சங்கீதமாய்
செவிவழியே சேரும்.

உணர்விழந்து சோரும் வேளை
ஓரிழையாய் சுவாசம் தோன்றி
வலிமையைக் குன்றச் செய்யும்.
நினைவுகள் மங்கிச் சோர,
உடலது தளர்ந்து போகும்.



# ஓய்வின் அசைபோடல்களில்...

ஓய்வு இன்று தொடங்குகின்றது.
இதமாயிருக்கின்றது.
மீள் நினைவுகள் மின்னலென
தோன்றி மறைகின்றது.

அனுபவங்களின் அசைபோடல்களில்
ஆனந்தமும் சோகங்களும் –
கற்ற கணிதமும் விஞ்ஞானமும்
அந்நியமாய் தோன்றும்.
பேரேடுகளும் காசோலைகளும்
பிறிதொரு பாடமாய் மாறும்.

அதிகாரியின் பணிப்புகளில்,
இறுக்கங்கள் சூழ்ந்திருக்கும்.
பெற்ற பட்டங்கள்
நூலிழையில் தொங்கும். தன்
வயமிழந்து வெற்று மனிதனாய்
மீள்தலுக்காய் ஏங்கும்.

சேவையும் நயப்பும் நிதம்
செக்கு மாடுகளாய் மாற்றும்.
இன்று தொடங்குகின்றது ஓய்வு,
மீதமான வாழ்விற்காய்.



# பல்லி

இந்தப் பல்லிக்கு
நேரமே கிடையாது,
சுவரிலே ஒட்டியபடி
எந்த நேரமும்
அலைந்து திரியும்.

விட்டில், சிறு பூச்சியென
கவ்வி இரையாக்கும்.
நித்திரையினின்று ஏதோ
நினைந்து எழுகையில்
"இச்" "இச்" என ஒலிக்கும்.
மனது தவிர்த்தாலும்
சகுனத்தை யோசிக்கும்.

விசையினை அழுத்தி
இருளினைப் பிளக்கையில்
உச்சியில் பல்லி
ஊர்வது தெரியும்.

உச்சியில் பல்லி சொல்லல்
அச்சமில்லை என்று
அம்மா கூறிய ஞாபகம்!
ஆனாலும் மேலும் மேலும்
மனதினிற் சங்கடங்கள்.
பல்லியைச் சபித்தவாறு
தொடர்ந்திடும் வேலைகள்.
வேலைகள் நடுவே
விபரீதக் கற்பனைகள்.

மாலையில் பல்லி சொன்னால்
மாலைப் பல்லிக்கு
வேலையில்லை என்றும்
அம்மா உரைத்ததுவும்
நினைவினில் உறுத்தும்.

பல்லியின் எச்சம்
நோயினைத் தருமாம்.



பல்லியைப் பார்க்கையில்
கொலைவெறி தோன்றும்.

இந்தப் பல்லியினமே
வெறுப்பானவை தாம்.
உடும்பினைக் கண்டால்
முதலையைப் பார்த்தால்
மீண்டும் பல்லியின்
ஞாபகம் துளிர்க்கும்.
பல்லிகளற்ற உலகில்
வாழ்தல் நலமென
மனது நினைக்கும்.

# மாயமான்

பட்டி மண்டபங்களில்
தோன்றிய,
கண்ணகி, மாதவி, சீதை
ஆகியோர்
காணாமற் போயினர்.

கைத்தொலைபேசியுடன்
இராமர்கள்–
சீதையை வீட்டில் பூட்டி,
விடுதிகள் தோறும்
மாயமானைத்
தேடும் படலங்கள்.

நாகரீக அசுரர்கள்
காவிய நாயகர்களை
வதம் செய்வதனால்
ஆதி மனிதர்களாக
மாறும் மக்கள்.



செல்லரித்த காகிதங்களாய்
காவியங்கள்
இற்று உதிர்கின்றன.
வரலாற்றுச் சுவடிகளும்
நதியினால் அள்ளுண்டு
எங்கோ மறைந்துள்ளன.

நதி மூலம் தேடித்தேடி
நாட்கள் கடக்க
நதியே
தொலையும் அபாயம்.

புதிய காவியங்கள்
படைப்பதற்கு
பாத்திரங்களின் தேடலுடன்
பொழுதுகள் கழிகின்றன.

# குரூரத்தின் சாட்சிகள்

ரசமிழந்த உடைந்த
கண்ணாடிகளினூடாகத்
தெரியும் பிம்பங்கள்
உருமாறிக் கிடக்கின்றன.

அங்கங்கள் ஒவ்வொன்றும்
விகாரமாய்த் தோன்றியபடி
குரூரத்தின் சாட்சியாய்
மனத்தினை நெருடும்.
மனித வாழ்விலும்
ஊனங்கள் உருப்பெருத்து
உயிர் நிலையைத் தாக்கும்.
உடைந்த கண்ணாடிகளாக
மரபுகள் தெளிவற்றதாய்;

புதிய கண்ணாடிகளில்
தெரியும் காட்சிகள்
மாய விம்பமானாலும்
மனதினை வசீகரிக்கும்.



# பிச்சைப் பெட்டிகள்

அடிக்கடி பூமி பிளக்கின்றன.
பிளந்த வாயினூடே,
விஷ வாயுக்களும், பூதங்களும்-
புறப்பட்டு வருகின்றன.

விஷவாயுக்கள்
சூழலை மாசுபடுத்தி
மக்களின் நோய்களுக்கு
காரணியாகின்றது.

பூதங்களோ
பொய் வாக்குறுதிகளுடன்
பூமியைச் சுவர்க்கமாக்க
மந்திரக் கோல்களுடன்
உலா வருகின்றன.

மக்கள் பிச்சைப் பெட்டிகளை
ஏந்தியவாறு,

பொன் வாத்து முட்டைகளுக்காய்
காத்திருப்பர்.

வெறும் வயிற்றில் பசியோ
திராவக மாய்க் குமிழியிடும்-
மண் கிண்டிய நிலங்களில்
நாய்களைத் துரத்தியபடி
இருப்பிற்காய் போராடுவர்.

இன்னும் இன்னும் ...
பிச்சைப் பெட்டிகளில்
பொன் முலாம் பூசுவதற்கு
ஏற்பாடுகள் தொடரும் -
மக்களின்
எதிர்பார்ப்புகள் முடங்கும்.



# வேலியும் பயிரும்

நான், நானாக இல்லை
என் சுயமிழக்க
துரத்தப்படுகின்றேன்.
கதிரையில் உறங்கும்
அதிகாரங்கள்
கண் மூடிய படியே
ஏவிக் கொண்டிருக்கும்;

மூச்சை ஒலியாக்கி
கற்பிக்கும் கணங்கள்
மாணவ எண்ணங்களூடு
என்னை ஒன்றாக்கும்.
உருவம் அழிந்து போக
உணர்வுகள் மேலோங்கி
கல்வியே உயிராகத்
தெரியும். என்
சுவடுகள் பின்பற்றி
மாணவர்களும்
பின்னே தொடர்வர்.

முளைக்கும் பயிரை
பிடுங்கி நடுதல் போல்
நிகழும் மாற்றங்கள்
அடிக்கடி.

எல்லை வேலிகள்
கறையான் அரித்தால்,
மிருகங்கள் சுலபமாய்
வேலியால் நுழைந்து
பயிரையும் மேயும்.



# நான் ...

எதுவுமே நடக்கவில்லை.
இனிமேலும்,
எதுவும் நடப்பதற்கான
சாத்தியமும் இல்லை.
என் பின்னால் இருப்பவர்கள்
கதைப்பவை
செவியில் சேர்கின்றன.
மோதும் ஒலிகள்,
செவிப்ப(ா)றைகளில்
முட்டி
வே(ற்)று மொழியாக
உதிர்கின்றன.
நான், என்னுள் மௌனமாக...

யாரோ வருகிறார்கள்
என்னவோ கதைக்கிறார்கள் -
என் விழித்திரையில்
எல்லாமே

வேற்று உருவங்களாக...
எதுவுமே அர்த்தப்படாமல் -

வீசும் காற்றுக் கூட
பருவ நிலை தப்பியதாய்.
எப்போதும் என்னுள் ஏதோ
உறைந்ததான பிரமை,

நெம்புகோல் கொண்டு
அசைக்க முடியாத சுமை;
சுமைகளை இறக்கவியலா
உபாதைகளுடன்,
ஒன்றுடனும் சமரசமில்லாமல்
கூறுபடுத்தப்பட்டு
இருக்கும் நானாக...



# வரட்சி

உடலில் காங்கையைச்
சுமந்தவாறு நீருக்காய்
அலைகின்றேன்.
கிணறு, குளம், கடல் என
நீர் நிறைந்திருந்தாலும்
மனதிற் குகந்தவாறு
அமையாத நீர் நிலைகள்:
நிலத்தடி மாசு நிறைந்த
கிணறும்,
கழிவுகள் கொட்டுகின்ற
குளமும்,
எல்லைகள் வரையறுத்த
கடலும்,
எனைப் பார்த்து அழைக்கின்றன.
மாசுடன் கூடிய நீரை
உட்கொள்ளாமல்
என்றும் வரட்சியுடனான
உடல்
தவிப்புக் கொள்கிறது.

# மறந்து போன நாட்கள்

வான் சுரந்து
வயல் விளைந்து
நெல் கொழிக்கும்.
தீந் தமிழின்
சுவை யூட்டும்
பாடலிசைக்கும்.
ஊண் மறந்த
உழவர் உழைப்பு
மாண்பு சேர்க்கும்.

புதிதாய் கதிரறுத்த
பொங்கல் சுவைக்கும்-
காலமது ஒன்றிருந்து
காட்சியே மாறியது
வான் பொழிந்து
வளங்கள் மூழ்கி
வாழ இயலாத
வறுமையுறு மக்கள்



காணும் துன்பங்கள்
கணக்கி லடங்கா.

ஆன வழியின்றி
அடுப்பு மெரியாது
ஊண் மறந்து
ஒருகரை சேரமாட்டா (து)
உழல்கின்றார் துன்பமதில்
ஏன் பிறந்தோமென்று.
இதயத்தில் செந்நீர்வழிய
நாள் மறந்து வாழ்கின்றார்
நலமொன்று மறியார் பாவம்.

# வெறுமையே நிஜமாகி

மனதின் ஒளிக் கருவி
நிஜத்தினைப் படம் பிடிக்கும்.
வாழ்தலுக்காய் கையேந்தும்
வகையற்ற மாந்தர்கள்
வசந்தத்தின் பூச்சொரிதலுக்காய்
விழி கூர்ந்து நிற்பர்.

காற்றின் அசைவுகளில்
அந்தகாரம் செறியும் -
தூசியும் துகள்களும்
சூழும், மூச்சுத் திணறும்.

கரைசேரும் கனவுக்காய்
கண்கள் மூடிக் கொள்ள
கண நேர அமைதி பிறக்கும்.

சூழ்நிலையின் தாக்கத்தால்
கண்கள் மீளவும் திறக்க
மனதில் வெறுமை தோன்றும்.



# பூஜ்ஜியம்

எளிதாகச் சொல்லுதல்
இயல்பாகிப் போகின்றது.
செயலுக்கு உருவமூட்டும்
செயல்திறனற்ற யாவும்
சோம்பலுக்குள் மூழ்கும்.

மேலாதிக்க முனைப்புகளும்
அதிகாரத் தளைகளும்
திறமைகளை நசுக்கி ஆளும்.
நிறைவேற்ற முடியாத
தேவைகள் முடிவிலியாய்
பூஜ்ஜியத்துள் உறையும்.

# நிழல்

நிழல் விடாமல் எம்மை
துரத்துகின்றது
நீண்டதாகவும் குறுகலாகவும்
ஒளியின் அலைப்பினால்
ஊசலாடுகின்றது.

நிழலின் ஆக்கிரமிப்பில்
வாழ்க்கை
எதிர் நீச்சல்போடுகின்றது.
யதார்த்தம்
தூரத்தே மௌனிக்கின்றது.

நிழலை நிஜமென்று
வாழும் மனிதர்கள்
மின் பிம்பங்களாக,
வாழ்வின் அர்த்தமிழந்து
வக்கிரம் கொள்கின்றனர்.



சின்னத்திரையின் நிழலால்
சிறுமைகள் சேர்வதுவும்
சூத்திரங்களுக்குள் முடங்கி
சுயமிழந்து நிற்பதுவும்
வாழ்வின் இருப்பிற்கு
சவாலை உருவாக்கும்.

புத்தியினை அவமதிக்கும்
புனைவுச் சித்திரங்கள்
நிழல் வாழ்க்கையினை
நியாயப்படுத்துவனவாய்
நெறி பிறழச் செய்யும்.
மனம் எதிர்காலத்திற்காய்
ஏக்கம்கொள்ளும்.

# *அப்பாவின் கார்

அப்பாவின் கார் அழகாயிருக்கின்றது.
பாடசாலை சீருடை போல்
வெள்ளையாய் மினுங்குகின்றது.
இருக்கைகளின் மென்மை
அம்மாவின் அரவணைப்பினைப் போல்
இதமாய்க் காணும்-

பொம்மைகளும் பூக்களும்
மலர்ந்து சிரிக்கின்றன.
காரின் ஓட்டத்தில்
மரங்களும் வீடுகளும்
பின்னோக்கி நகரும்.
மெல்லிய சங்கீதத்துடன்
பாடசாலைப் பிரயாணம்.

அப்பாவின் கார் அதிசயமானது
நீண்ட ஓட்டத்தின் பின்னர்
நிறையப் பெற்றோல் குடிக்கும்



அப்பாவின் காரைப்போல
எனது காரும் ஓடுகிறது.
கைகள் "ஸ்ரேறிங்காய்" மாறும்
கால்கள் கடும் வேகம் சேர்க்கும்
நீண்ட தூரம் ஓடியதால்
எனது காரும் ஓய்ந்து விட்டது.
வீட்டிலே வாங்கிய பெற்றோல்
ஆயாசம் போக்குகிறது.

கண்கள் மயங்கிய நிலையில்,
கனவில் காரின் வேகம் கூடுகிறது,
மெல்ல மெல்ல நினைவுகள்
நழுவிக் கொண்டே இருக்கிறது...

* இடைநிலைக் கல்வியின்போது படித்த ஆங்கிலக் கவிதை ஒன்றின் அருட்டுணர்வு

# முதுமை

இளமை நினைவுகள்
ஊற்றாய் சுரக்க
உணர்வுகள் சிலிர்க்கும்.
விஷமாய் இருந்தவை
அமிர்தமாய் மாறும்.
அமிர்தமாய் உள்ளவை
விஷமாய் தோன்றும்.

மழலைகள் பேச்சில்
மகிழ்ந்தவை யாவும்
பழையன வாகிப்
பொறுமையைக் குலைக்கும்.
எதிரியாய் இருந்தவன்
உற்றவ னாவான்.
உற்றவை எளிதில்
அற்றன வாகும்.

சரியெது பிழையெது
தெரியாத வகையில்
தன்னிலை மறக்கும்
சொல் இதமிழக்கும்.
சுற்றமும் விலகும்.
மருந்துகள் நெடியோ
மரணத்தை யாசிக்கும்.
தன்னுயிர் வெறுத்து
வெறுமையில் உழல
வேதனை வாழ்வு
விடுபட நினைக்கும்.

# மகிழ்ந்த காலங்கள்

முற்றத்து மண்ணினிலே
முழு நிலவின் ஒளியினிலே
சுட்டு விரல் தொட்டளைந்து,
உயிரெழுத்தை எழுதும் போது
ஒன்றிய மனத்திடையே
தோன்றிய தொரு இன்பம்.

பச்சிளம் பாலகனாய்
பள்ளிக்குச் செல்வதற்காய்
உச்சி முகர்ந்தும் அன்னை
உளம் சேர வாழ்த்துகந்தும்-
கைபிடித் தழைத்தபோது
தோன்றிய தொரு இன்பம்.

முற்றத்து மா மரத்தின்
அணில் கோதிய பழமதனை
கற்கள் கொண் டெறிந்து
ஓடிப் பொறுக் கியுடன்



தேடிச் சுவைக் கையிலே
தோன்றி யதொரு இன்பம்

முற்றத்தில் கோல மிட்டு,
வாழையுடன் தோரணங்கள்
மாவிலையும் தொங்க விட்டு,
பொங்கலிட்டு, பூசை செய்து
சுற்றமது சேர்ந்த போது
தோன்றிய தொரு இன்பம்.

இர விரவாய்க் கண் விழித்து
இயம்பியவை கற்றுணர்ந்து,
செறிவான நல்ல நூல்கள்
தேடலின் வழியே சேர்ந்த
கல்வியால், உற்ற பேரால்
தோன்றிய தொரு இன்பம்.

மண மகனாய் மாலையிட்டு
மனதினுள்ளே இன்பம் சேர

மலரனைய மென்மை பூண்ட
மங்கையவள் கை பிடித்து
அணங்கவளை உணர்ந்த போது
தோன்றிய தொரு இன்பம்.

இதமான இராக மொன்று
இனிமையாய் செவியில் சேரும்
பதமான உணர்வு போல,
பாசத்தின் விளைவாய் மிளிரும்
மகவினது முதற் குரலால்
தோன்றிய தொரு இன்பம்.

தேர்ந்த நற் சொல்லெடுத்து
தேம் பாவாய்ப் புனைந்த கவிச்
சீர்த் திறனைச் சுவைத்தோர்
நயந்திடும் உரையினாலே
சேர்ந்திடுமே மாட்சியதனால்
தோன்றிய தொரு இன்பம்.



# கேள்விக்கு எல்லை எது?

கேள்விகள் எம்மை
என்றும் துரத்தும்
வீட்டிலும் வெளியிலும்
எத்தனை கேள்விகள்.
பாலப்பராயம் தொட்டு
பரீட்சைக்கான கேள்விகள்.
படித்துப் பட்டத்தின் பின்
நேர்முகத் தேர்வுகள்.
தேர்வுகள் தாண்டி
தொழிலுக்குள் சேர்ந்தால்,
மேலதிகாரியின் கேள்விகள்.
அரச பணிகளில் தொடரும்
ஐயவினாக்கள்.
கேள்விக்கான பதில்கள்
மனத்திடை தேடலாய்
மகிழ்வினைக் குலைக்கும்.

# யதார்த்தமும் மாய யதார்த்தமும்

கற்பனையின் உள்ளீடாய்
பாத்திரங்கள் உருவாகும்.
புனைவுகள் எப்போதும்
புதுமையானவை தான்.

ஒன்றிலிருந்து பிறிதொன்றாய்
மாற்றங்கள் கொள்வதுவும்
யதார்த்தத்தின் கூறுகளாய்
பிரத்தியட்சங்கள் தோன்றுதலும்,
மனதின் நீட்சியினால்
மாய யதார்த்தங்களென
கனவில் உருக்கொள்ளும்.
காட்சிகளும் விரியும்.

தெரிதலுக்கு அப்பால்
திரைபோட்டு மூடியவை
மனதின் ஆழ்தளத்தில்
அரூபமாய்த் தோன்றும்.

வாழ்வின் பரிமாணங்கள்
பதிவுகளாய் எல்லை விரிக்கும்.

புனைவுகளினூடே
வலுப்பெறும் தோற்றங்கள்
வெளிகளை நிரப்பும்.

# மனிதனுக்கு என்ன விலை

தூக்கி யெறிந்த பாத்திரமும்
துருவேறிய உதிரிகளும்
வருமானத்திற் குதவியாகும்.
உருமாறிப் பின்னுமொரு
பொருளாகி விலையாகும்.

வெறும் வளவில் வீசிவிடும்
பொருள் போல நம் வாழ்வும்
புவிதனிலே அற்பமாகும்.

கல்வியொடு செல்வமுற்ற
கனம் பெற்ற மனிதராயினும்-
நல்வாழ்வு சிதைந்த காலை,
நயம்பெறுதற்கொன்றுமின்றி
செல்வாக்கும் சொல்வாக்குமிழந்து,
மீதமான எச்சங்கள்கூட
இழிவாகிப் போதல் காண்பீர்!



# ஒரு முகமாய் வாழ்தல் கூடும்

விளையாத விளை நிலங்கள்
வெந்து தீயில் வாடுதல் போல்
ஓயாத துன்பச் சுமைதனிலே
உழன்றிடும் மக்கள் பாவம்.

ஊர் எப்படிப் போனாலென்ன
உலகமே விதந்து போற்ற
பேராக வாழ்ந்தால் போதும்-
பிறர் துன்பம் பார்க்க மாட்டார்.

பாராளுமன்னர் கூடத் தம்
பவிசினைக் காட்டுதற்காய்
சோராமற் செலவு செய்து
சோபிதங்கள் காட்டி நிற்பர்.

தேர் ஓட வடம் பிடித்தல்
தெய்வ சந்நிதிக்கு மட்டுமல்ல,
ஊர் மேவி ஒன்று கூடின்
ஒரு முகமாய் வாழ்தல் கூடும்.

# சேவல்

இந்தச் சேவல் ஆங்காரத்துடன்,
எப்போதும் கூவும்;
செம்பழுப்பு இறகுகளை அடித்து
சிவப்பான கொண்டையை அசைத்து
அதிகாரத் தொனியுடன்;
குரலெழுப்பும்;

பயந்த கோழிகள், பதுங்கியவாறு
புகலிடம் தேடும்
வீறாப்புடன் விரட்டும் சேவல்
அடைகிடக்கும் பேட்டினையும்
வன்புணர்வு செய்யும்.
திருப்தியுறாச் சேவல் இன்னும்
பேடுகளைத் துரத்தியபடி
அவைமீது ஏறிச்சுகிக்கும்;
மதர்ப்பின் உச்சத்தில்
உணவினையும் தட்டிப் பறிக்கும்



அட்டுழியத்தின் எல்லையில்,
சேவல் விலையாகும்.
அயல் வீட்டின் அடுப்பில்
வெந்து கறியாகும்.

கறியின் ருசி பார்க்க
கோழிகளும் ஒன்று சேரும்
தெருவோர நாய்களும்
இறைச்சியின் வாசனைக்காய்,
உமிழ்நீர் வடிக்கும்.

# புதிய வீடு

எதிர்பார்ப்புக்களைத் தகர்த்த
சிதிலங்களை அகற்றியவாறு
வீட்டினைப் பார்க்கின்றேன்:

வெளியினை நிறைத்த வீடு
முற்றத்தைச் சுருக்கியபடி
விளித்துக் கொண்டிருக்கிறது

தலையசைத்து வரவேற்கும்,
படலைப் பூவரசுகளின்
அடையாளங்களைத் தொலைத்து
கொங்கிறீற் மதில்கள்
உயர்ந்து நிற்கும்

மென்பூக்கள் வாசம் வீசும்
முன்றலின் வேப்பமரம்
வீட்டின்,
யன்னலாய் கதவுகளாய்
உருக்காட்டும்;



நிழலைக் கொன்றொழித்த
சூரியனின் வெப்பம்
மனத்திடை தகிக்கும்:

கூரிய ஆணிகளால் தைத்த
எல்லைக் கதிகால்கள்
கண்ணீர் வடிக்கும்:

முறிந்த எலும்புகளாய்
விழுந்த தென்னோலைகள்
இற்று,
குருதி வாசம் வீசும்.

ஒப்பனை கலைந்த மேடையாய்,
செறிந்த தோட்டப் பரப்பு
காட்சி தரும்;

எழுந்து நிற்கும்,
புதிய வீடு
பழைய வாசங்களைத்
தொலைத்தவாறு...



முப்பத்து ஏழு வருடங்களாக அரச பணியில் ஈடுபட்டிருந்த வரதராஜன், தனது பணி ஓய்வு கிடைக்கப்பெற்ற பிறகு, தன் முதலாவது கவிதைத் தொகுப்பைத் தந்துள்ளார்.

ஒரு உண்மையான அரச பணியாளன், மனச்சாட்சியுடனும் மனித நேயத்துடனும் இருக்க விரும்பியதன் விளைவான எதிரொலிகளாகவும் பணிக்கால அனுபவங்களின் நுண்வலி வெளிப்பாடுகளாகவும் மனித நேயப் பதிவுகளாகவும் விளங்கு கின்ற 'என்கடன்...', 'ஓய்வின் அசைபோடல்களில்....' போன்ற கவிதைகள் என்னை மிகவும் தொட்ட கவிதைகளாக அமைந்துள்ளன.

கோப்புகளோடும் மேசைகளோடும் அலுத்துச் சுழலும் மின் விசிறிகளோடும் சோம்பி ஒழுகும் மின்னொளியோடும் நிகழ்ந்தேறுகின்ற காரியாலயப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஒரு மனிதனை 'என்கடன்' எம் முன் கொண்டு வருகிறது.

***முன்னுரையிலிருந்து***
***ந. சத்தியபாலன்***